**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 96 /2019 PW1**

06.03.2025 **வா.சா.1 சரசு சத்திய வாக்குமூலத்தின் பேரில் 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2ம் வாதி தேவராஜ் கூலி வேலை செய்கிறார். 3ம் வாதி தனுஷ் படித்துக் கொண்டு உள்ளார். என் மாமனார் வீட்டோடு இருந்து வருகிறார். அவருக்கு 60 வயதாகிறது. 5ம் வாதிக்கு கைகால் வராததால் வீட்டிலேயே இருக்கிறார். எனது மாமனார், மாமியாருக்கு 2 மகன்கள், 2 மகள்கள். என் கணவர் எனது மாமனாருக்கு 2வது மகன் ஆவார். என் கணவரின் தம்பியும் அன்னமங்கலம் கிராமத்தில் இருக்கிறார். எங்கள் குடும்பத்திற்கு சொத்து எதுவும் இல்லை. என் மாமனார் குடும்பத்திற்கு சொத்து ஏதும் இல்லை. நான் மேல்மலையனூர் வட்டம் அன்னமங்கலம் கிராமத்தில் வசிக்கிறேன். மின் விபத்து போளூர் வட்டம் கேளூர் கிராமத்தில் நடந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனது கணவர் ஓட்டுநர் வேலை செய்தார். என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவருக்கு டாடா ஏஸ் வாகனம் உரிமையானது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் ஓட்டுநர் வேலையும் பார்க்கவில்லை, மேற்படி வாகனம் என் கணவருக்கு உரிமையானது இல்லை என்றால் சரியல்ல. நான் அதிகமான இழப்பீடு வாங்க வேண்டும் என்ற காரணத்திற்காக என் கணவர் ஓட்டுநர் வேலை பார்த்தார், சொந்தமாக வாகனம் வைத்திருந்தார் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமனார், மாமியார் எப்போதுமே என் கணவரின் வருவாயை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெற வேண்டும் என கருதி என் மாமனாரும், மாமியாரும் என் கணவரின் வருமாணத்தை சார்ந்து வாழ்ந்தார்கள் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரின் வருவாயை நிருபிக்க ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 லட்சம் சம்பாதித்தார் என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.